# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க,
## உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, மாச்சு மாதம் 30 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 57.50** **தபாற் செலவு : ரூபா 15.00**

## 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ— 4/2007

### 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "(ii) அத்தகைய வதிவிடத்திற்கெனச் செலுத்தப்பட்ட மொத்த வாடகை" என்பதிலிருந்து அப்பந்தியின் இறுதிவரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(ii) அத்தகைய வதிவிடத்திற்கெனச் செலுத்தப்பட்ட மொத்த வாடகை,

இவற்றுள் எது கூடியதோ அத்தொகையாதல் வேண்டும்

ஆயின், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு —

(அ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களின் கூட்டுமொத்தம் ஒரு மில்லியன் எட்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவிடத்து, ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாவுக்கதிகமான ; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களின் கூட்டுமொத்தம் ஒரு மில்லியன் எட்டு இலட்சம் ரூபாவை விஞ்சுமிடத்து, ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபாவுக்கதிகமான,

வாடகைப் பெறுமதியின் ஏதேனும் விஞ்சுதொகை புறக்கணிக்கப்படுதல் வேண்டும் ;" அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "அத்தகைய பங்கு கையளிக்கப்படும் நேரத்தில் அதன் பெறுமதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய பங்கின் கையளிப்பு 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் இடம்பெறுமிடத்து, அது கையளிக்கப்படும் நேரத்தில் அதன் பெறுமதி" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது—

(1) அவ்வுட்பிரிவின் (ங) என்னும் பந்தியில், "குறிப்பீடுசெய்யப்படுவதும், எவரேனும் ஊழியர் 1997 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் அல்லது பின்னர் ஏதேனும் நேரத்தில் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் தவிர்ந்த வேறு ஏதேனும் கூட்டுத்தாபனத்திலான சேவைக்காலப்பகுதிக்கு ஏற்றுக்கூறப்படற்பாலதான வாறு, ஏதேனும் ஊழியத்திலிருந்து ஓய்வுபெறும் நேரத்தில் அவருக்குச் செலுத்தப்பட்டதுமான, ஏதேனும் பணத் தொகையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குறிப்பீடு செய்யப்பட்டதும் எவரேனும் ஊழியருக்கு (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் தவிர்ந்த வேறு ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்திலான 1997 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னரான அத்தகைய ஊழியரின் சேவைக்காலப்பகுதிக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான, ஏதேனும் ஊழியத்திலிருந்து அவர் ஓய்வுபெறும் நேரத்தில் அல்லது பின்னரான, ஏதேனும் நேரத்தில் அவருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகையின் அத்தகைய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) பந்தி (ச) என்பதன் (ii) ஆம் உட்பந்தியில் "ஏதேனும் பணத்தொகையின் அத்தகைய பாகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் பணத்தொகையின் அத்தகைய பாகம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) பந்தி (ச) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் —

"(ஞ) எவரேனும் தொழில்தருநரின் ஊழியர் ஒருவருக்கு, அத்தகைய தொழில்தருநரின் எல்லா ஊழியர்

களுக்கும் ஒரேசீராக ஏற்புடைத்தாகும் என ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படும் ஒரு திட்டத்திற்கிணங்க அத்தகைய ஊழியருக்கு அல்லது அத்தகைய ஊழியரின் எவரேனும் நியமத்தருக்கு ஏதேனும் கம்பெனியில் ஏதேனும் பங்கின் அல்லது ஏதேனும் பங்கைக் கொள்வனவு செய்யும் ஏதேனும் விருப்புத் தெரிவின் விடயத்திற்கேற்ப, ஒதுக்கீட்டிலிருந்து அல்லது கொடையிலிருந்து அத்துடன் திரளும் ஏதேனும் நன்மையின் பெறுமதி.

இப்பந்தியில் ஏதேனும் பங்கின் ஒதுக்கீட்டிலிருந்து அல்லது ஏதேனும் பங்கை வாங்குவதற்கான விருப்புத் தெரிவிலிருந்து திரளும் ஏதேனும் நன்மை தொடர்பில் “பெறுமதி” என்பது, விடயத்துக்கேற்ப, அத்தகைய பங்கு ஒதுக்கீடு செய்யப்படும் நேரத்தில் அல்லது விருப்புத் தெரிவு விற்பனை செய்யப்படும் நேரத்தில், விடயத்துக்கேற்ப, அத்தகைய ஒதுக்கீட்டிற்கு அல்லது கொடைக்கு அறவிடப்பட்ட விலைக்கு மேலாக அதன் சந்தைப் பெறுமதியின் மிகை ஏதுமிருப்பின் அத்தகைய மிகை என்று பொருள்படும் ; அத்துடன்

(ட) எவரேனும் வதிவுள்ள தனியாளினால் –

(i) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் பாகம் XI என்பதன்கீழ் கரைகடந்த கம்பெனியொன்றாகப் பதிவு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றில் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது வாடகைக்குப் பெறப்பட்ட ; அல்லது

(ii) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்தொழிற் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ்ச் செய்யப்பட்ட தீர்மானமொன்றின் பயனைக் கொண்டு இலங்கைக் கப்பலொன்றாகக் கருதப்பட்ட,

கப்பலொன்றிலான தொழிலிலிருந்து 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் ஈட்டப்பட்ட வேதனாதிகள்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது –

(1) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில், "அத்தகைய வட்டி." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வட்டி;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் –

"(ஔ) ஏதேனும் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிலிருந்து எவரேனும் ஆளுக்குத் திரளும் வட்டி.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"(ஆ) கூறு ஒன்றை வைத்திருப்பவருக்கு ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாம் ;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின், (i) என்னும் உட்பந்தியில் "(ஏதேனும் நிர்மாணக் கருத்திட்டம் தொடர்பிலான சேவைகள் உட்பட)" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ஏதேனும் நிர்மாணக் கருத்திட்டம் தொடர்பான சேவைகள் உட்பட" ; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(2) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :–

"(ஈஈ) ஏதேனும் வியாபாரத்தின், தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் நெறிமுறையின்போது ஏதேனும் நிர்மாணக் கருத்திட்டத்தைக் கொண்டு நடாத்துகையில் அந்த வரிமதிப்பீட்டாண்டில் இலங்கைக்கு வெளியே ஆற்றப்பட்ட சேவைகளிலிருந்து ஏதேனும் பதிவுள்ள கம்பெனியால், வதிவுள்ள தனியாள் ஒருவரால் அல்லது ஏதே

னும் பங்காண்மையால் ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கு வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப் பட்ட இலாபங்களும் வருமானமும் (நியாயமான செலவுகளாக ஆணையாளர் தலைமையதிபதி யால் கருதப்பட்டவாறு அத்தகைய கம்பெனியால், தனியாளினால் அல்லது பங்காண்மையால் செலவிடப்பட்ட ஏதேனும் அத்தகைய தொகை யைக் கழித்து வங்கியொன்றின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படுமாயின், அத்தகைய இலாபங்களும் வருமானமும் ;" ;

(3) அப்பிரிவின் (ந) என்னும் பந்தியில், "கொள்ளுதல் தேதியிலிருந்து இரண்டாண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்றள்ளவிடத்து, ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம் அல்லது ஏதேனும் முயற்சி மூலதனக் கம்பெனி தவிர்ந்த எவரேனும் ஆளினால் அல்லது அதற்குத் திரளுகின்ற இலாபங்க ளும் வருமானமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக,

ஏதேனும் பங்கின் விற்பனையிலிருந்து, –

(i) 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏதேனும் ஆளினால் அல்லது அவருக்கு அல்லது ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பு, பரஸ்பர நிதியம் அல்லது முயற்சி மூலதனக் கம்பெனி தவிர்ந்த பங்காண்மை யால் அல்லது பங்காண்மைக்குப் பெறப்படுகின்ற அல்லது திரளுகின்ற ; அத்துடன்

(ii) 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கு எவரேனும் ஆளினால் அல்லது அவருக்கு அல்லது ஏதேனும் பங்காண்மையால் அல்லது பங்காண்மைக்குப் பெறப்படுகின்ற அல்லது திரளுகின்ற,

எவையேனும் இலாபங்களும் வருமானமும்"; என்னும் சொற்களை இடுவதன்மூலமும் அத்துடன்

(4) அப்பிரிவின் (ர) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின் வரும் பந்தியை இடுவதன் மூலமும் –

"(ர) கம்பெனியொன்றுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பில் இலங்கையிலுள்ள ஏதேனும் வங்கிக்கு செலுத்தப்படற்பாலதான வட்டிக்குச் சம மானதும் —

(i) அத்தகைய கம்பெனி அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனியொன்றாக இருக்குமிடத்து, பிரிவு 20 இன் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் புதிய பொறுப்பு முயற்சியில் ; அத்துடன்

(ii) அத்தகைய கம்பெனி அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனியொன்றாக இருக்குமிடத்து, 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மீள்நிலை கொள்ளப்பட்ட பொறுப்பு முயற்சியில்,

முழுமையாக முதலீடு செய்யப்பட்டதுமான தொகையொன்று ;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "எவரேனும் ஆளின் அல்லது ஏதேனும் பங்காண்மையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் மூலதனச் சொத்தின் கையுதிர்ப்பிலிருந்தான எவையேனும் இலாபங்களாகவும் வருமானமாகவும் அல்லாத, எவரேனும் ஆளின் அல்லது ஏதேனும் பங்காண்மையின், 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட எவரேனும் ஆளின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று" என்னும் இலக்கங்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக, "2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று" என்னும் இலக்கங்களையும் சொற்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ( ) ஆம் உட்பந்தியில் "முதலீடொன்றுடன்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "முதலீடொன்றுடன் 2002, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் இலக்கங்களையும் சொற்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 24அ மற்றும் 24ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் பிரிவுகள் 24அ மற்றும் 24ஆ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

"ஏதேனும் புதிய அல்லது தரமுயர்த்தப் பட்ட திரையரங்கிலிருந்தான இலாபங்களுக்கும் வருமானங்களுக்கும் வருமான வரியிலிருந்து விலக்களித்தல்.

24அ. (1) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் புதிய திரையரங்கில் அல்லது தரமுயர்த்தப்பட்ட திரையரங்கில் திரைப்படம் காண்பிப்பதலிருந்தான 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (ஏதேனும் மூலதனச் சொத்தின் கையுதிர்ப்பிலிருந்தான ஏதேனும் தேறும் இலாபங்களாயும் வருமானமாயும் அல்லாத —

(அ) திரையரங்கு ஒரு புதிய திரையரங்களாக இருக்குமிடத்து, பத்து ஆண்டுகளைக் கொண்ட ; அல்லது

(ஆ) திரையரங்கு தரமுயர்த்தப்பட்ட ஒரு திரையரங்காக இருக்குமிடத்து, ஐந்து ஆண்டுகளைக் கொண்ட,

காலப்பகுதியொன்றுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) விடயத்திற்கேற்ப, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பத்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி அல்லது ஐந்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி ஏதேனும் திரையரங்கு தொடர்பில் விடயத்திற்கேற்ப, அத்தகைய புதிய

திரையரங்கில் அல்லது தரமுயர்த்தப்பட்ட திரையரங்கில் எந்த வரிமதிப்பீட்டாண்டில் திரைப்படம் காண்பித்தல் தொடங்கப்பட்ட வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து தொடங்குதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்கு —

(அ) "புதிய திரையரங்கு" என்பது —

(i) எந்தத் திரையரங்கில் திரைப்படம் சார்ந்த படச்சுருள்களின் காண்பித்தல் 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்றதோ அந்தத் திரையரங்கொன்று ; அத்துடன்

(ii) எந்தத் திரையரங்கானது எண்முறை தொழில்நுட்பவியல் எண்முறை அரங்காட்டு முறைமை மற்றும் டொல்பி ஒலியியல் முறைமைகள் போன்ற சாதனங்களைக் கொண்டுள்ளதாக 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய திரைப்படக்கூட்டுத் தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் அத்தாட்சிப் படுத்தப்படுகின்றதோ அந்தத் திரையரங்கொன்று

எனப் பொருள்படும் ; அத்துடன்

(ஆ) "தரமுயர்த்தப்பட்ட திரையரங்கு" என்பது —

(i) எந்தத் திரையரங்கில் திரைப்படம் சார்ந்த படச்சுருள்களின் காண்பித்தல் 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கியிருந்ததோ அந்தத் திரையரங்கு எனவும் ;

(ii) எந்தத் திரையரங்கு 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் எண்முறை தொழில்நுட்பவியல் எண்முறை அரங்காட்டு முறைமை மற்றும் டொல்பி ஒலியியல் முறைமைகள் போன்ற சாதனங்களைக் கொண்டிருக்கவில்லையோ அந்தத் திரையரங்கொன்று எனவும் ; அத்துடன்

(iii) எந்தத் திரையரங்கு 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எண்முறை தொழில்நுட்பவியல் எண்முறை அரங்காட்டு முறைமை மற்றும் டொல்பி ஒலியியல் முறைகள்போன்ற சாதனங்களைக்கொண்டுள்ளதாக 1971 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றதோ அந்தத் திரையரங்கொன்று,

என்று பொருள்படும்.

“ஏதேனும் மீளத் திளைக்கப்பட்ட கைவிடப்பட்ட தொழிற்சாலையிலிருந்தான இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் வருமான வரியிலிருந்து விலக்களித்தல்.

24ஆ. (1) ஏதேனும் மீளத் திறக்கப்பட்ட கைவிடப்பட்ட தொழிற்சாலையின் தொழிற்பாட்டிலிருந்தான எவரேனும் ஆளின், 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்ட இலாபங்களும் வருமானமும் (ஏதேனும் மூலதனச்சொத்தின் கையுதிர்ப்பிலிருந்தான எவையேனும் இலாபங்களாயும் வருமானமாயும் அல்லாத 2011, மாச்சு 31ஆம் தேதியன்று முடிவுறும் காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்கு "மீளத் திறக்கப்பட்ட கைவிடப்பட்ட தொழிற்சாலை" என்பது –

(அ) ஏதேனும் வியாபாரப் பண்டத்தின் அல்லது பொருளின் தயாரிப்பில் அல்லது உற்பத்தியில் ஈடுபட்டிருந்த, ஆனால் 2006, நவெம்பர் 16 ஆம் தேதிக்கு முந்திய மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத இடையறாத காலப் பகுதிக்கு அவ்வாறு ஈடுபட்டிராததுமான ; அத்துடன்

(ஆ) அத்தகைய வியாபாரப் பண்டத்தை அல்லது பொருட்களை அல்லது வேறேதேனும் வியாபாரப் பண்டத்தை அல்லது பொருட்களை 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் உற்பத்தி செய்யத் தொடங்குகின்றதுமான,

ஒரு தொழிற்சாலை என்று பொருள்படும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது–

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் –

" (ஆ) (i) கொள்ளப்பட்ட ஏதேனும் பொறி அல்லது பொறித்தொகுதி சுகாதாரப் பராமரிப்பு வழங்குதல், கடதாசியில் அச்சிடுதல், இரத்தினக் கல் வெட்டுதல் அல்லது பட்டம் தீட்டுதல், வர்த்தக நோக்கங்களுக்கு ஏதேனும் வியாபாரப் பண்டத்தை சிப்பம் செய்தல், அரிசி குற்றுதல், ஆகிய ஏதேனும் தொழிலின் அல்லது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் ஆணையாளர் தலைமையதிபதியால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொழிலில் பயன்படுத்தப் படுமிடத்து ;அல்லது

(ii) சொத்துக்கள் 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொள்ளப்பட்டதும் 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் பாகம் XI இன் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பெனிக்குச் சொந்தமானதும் அல்லது அதனால் வாடகைக்கு அமர்த்தப்பட்டதும் அல்லது 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ்ச் செய்யப்பட்ட தீர்மானமொன்றின் பயனைக் கொண்டு இலங்கைக் கப்பலொன்றாகக் கருதப்பட்டதுமான கப்பலொன்றைக் கொண்டிருக்குமிடத்து,

வீதமானது கொள்ளற் செலவின் 331/3 சதவீதமாதல் வேண்டும் ; ”;

(2) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் –

“(இ) ஏதேனும் பொறி அல்லது பொறித்தொகுதி 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொள்ளப்பட்டு நிர்மாண வேலையைக் கொண்டுநடாத்தும் ஏதேனும் தொழிலில் பயன்படுத்தப்படுமிடத்து, வீதமானது கொள்ளற் செலவின் இருபத்தைந்து சதவீதமாதல் வேண்டும் ; ”;

(3) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், “ஏதேனும் வர்த்தகத்தில், வியாபாரத்தில், உயர் தொழிலில்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, ஏதேனும் வர்த்தகத்தில், வியாபாரத்தில், உயர் தொழிலில்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் –

"(உஉ) ஏதேனும் வர்த்தகத்தில், வியாபாரத்தில், உயர் தொழிலில் வாழ்க்கைத் தொழிலில் அல்லது ஊழியத்தில் 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளினால் உறப்பட்டதும் எந்த ஆண்டிற்கு இலாபங்கள் ஆய்ந்தறியப்படுகின்றனவோ அந்த ஆண்டின்போது அறிவிடமுடியாக் கடன்களாகியுள்ளவையுமான அறிவிடமுடியாக் கடன்களுக்குச் சமமான பணத்தொகையொன்று :

ஆயின், அறவிமுடியாக் கடன்கள் தொடர்பில் முன்னர் பதிவழிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட தொகைகளின் கணக்கில் அத்தகைய காலப்பகுதியின்போது அறவிடப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அக்காலப்பகுதிக்கான அவ் வர்த்தகத்தின், வியாபாரத்தின், உயர்தொழிலின், வாழ்க்கைத்தொழிலின் அல்லது ஊழியத்தின் வரவுகளாகக் கருதப்படுதல் வேண்டும் ;

"(உஉஉ) அத்தகைய ஆள் ஒரு வங்கியாக அல்லது ஒரு நிறுவனமாக இருக்குமிடத்து, 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இலாபங்கள் எந்தக் காலப்பகுதிக்கென ஆய்ந்தறியப்படுகின்றனவோ அந்தக் காலப்பகுதியின்போது அறவிடமுடியாதவையாக வந்துள்ளதாக மதிப்பீடுசெய்யப்படும் அளவுக்கு அத்துடன் அத்தகைய கடன்கள் அக்காலப்பகுதி தொடங்குவதற்கு முன்னர் வருமதியானவையாகவும் செலுத்தப்படற்பாலனவையாகவும் இருந்தன என்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய கடன்களுக்கு நியாயமானவையாக ஆணையாளர் தலைமையதிபதி கருதுகின்றவாறான அத்தகைய பணத்தொகை :

ஆயின் :-

(i) அவ்வாறு நியாயமானதெனக் கருதப்பட்ட அத்தகைய பணத்தொகை அக்காலப்பகுதியின் முடிவில் வருமதியாகவுள்ள கூட்டுமொத்தக் கடன்களின் ஒரு சதவீதத்தை விஞ்சுதலாகாது ;

(ii) இலாபங்கள் எந்தக் காலப்பகுதிக்கென ஆய்ந்தறியப்படுகின்றனவோ அந்தக் காலப்பகுதியின்போது அறவிடமுடியாததாகியிருப்பதாக அத்தகைய ஆளினால் மதிப்பீடுசெய்யப்பட்ட ஐயக்கடன்கள் இப்பந்தியின்கீழ் கழிப்பனவு செய்யப்பட்ட பணத்தொகையை விஞ்சுமிடத்து, மிகையானது இதற்குமுன் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியை உடனடுத்துவரும் காலப்பகுதியின் போது அறவிடமுடியாததாகியுள்ளதாக அத்தகைய ஆளினால் மதிப்பீடு செய்யப்பட்ட ஐயக்கடன்களாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(iii) கழிப்பனவொன்றாக முன்னர் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் ஐயக்கடனின் மதிப்பீடுசெய்யப்பட்ட தொகை குறைக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது அதன் ஏதேனும் பாகம் அத்தகைய காலப்பகுதியின்போது செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய தொகை எந்தப் பணத்தொகையால் அவ்வாறு குறைக்கப்பட்டுள்ளதோ அந்தப் பணத்தொகை அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தொகை இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அக்காலப்பகுதிக்கு அத்தகைய வங்கியின் அல்லது நிதி நிறுவனத்தின் வரவொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கங்களுக்கு "நிதி நிறுவனம்" என்பது 147 ஆம் பிரிவில் அச்சொல்லமைப்பிற்குத் தரப்பட்டுள்ள அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(உஉஉஉ) அத்தகைய ஆள் ஒரு வங்கியாக அல்லது ஒரு நிதி நிறுவனமாக இல்லாதவிடத்து, 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இலாபங்கள் எந்தக் காலப் பகுதிக்கென ஆய்ந்தறியப்படுகின்றனவோ அந்தக் காலப்பகுதியின்போது அறவிடமுடியாதனவாக வந்துள்ளதாக மதிப்பீடுசெய்யப் படும் அளவுக்கு ஐயக்கடன்களுக்கு நியாயமானதாக ஆணையாளர் தலைமையதிபதி கருதுகின்றவாறான அத்தகைய பணத்தொகை :

ஆயின், கழிப்பனவொன்றாக முன்னர் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் ஐயக்கடனின் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை அத்தகைய காலப்பகுதியின்போது குறைக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது அத்தகைய தொகை அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய தொகை எந்தப் பணத்தொகையால் குறைக்கப்பட்டுள்ளதோ அந்தப் பணத்தொகை அல்லது அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தொகை இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அத்தகைய காலப்பகுதிக்கு அத்தகைய ஆளின் வரவொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கங்களுக்கு "நிதி நிறுவனம்" என்பது 147 ஆம் பிரிவில் அச்சொல்லமைப்பிற்குத் தரப்பட்டுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

(5) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில், அப்பந்திக்கான காப்புவாசகங்களை விட்டு விடுவதன் மூலமும் ;".

(6) அவ்வுட்பந்தியின் (ஓ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில் :-

(அ) அக்காப்பு வாசகத்தின் (iv) ஆம் பந்தியில் "தொடர்பில் உறப்பட்ட செலவுகள் தொடர்பாக," என்னும் சொற்களுக்குப் பதிலாக "தொடர்பில் உறப்பட்ட செலவுகள் தொடர்பாக ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அக்காப்பு வாசகத்தின் (v) என்னும் பந்தியில் "கழிப்பனவு ஏதேனும் அனுமதிக்கப்படுதலாகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன்மூலமும் :–

"கழிப்பனவு ஏதேனும் அனுமதிக்கப்படுதலாகாது :

இக்காப்பு வாசகத்தின் நோக்கத்திற்கு "உறப்பட்ட செலவுகள்" என்பது அத்தகைய வாகனம் தொடர்பில் ஏதேனும் குத்தகை வாடகையின் அல்லது வேறு வாடகையின் கொடுப்பனவினது அல்லது அத்தகைய வாகனத்தின் கொள்ளலின் செலவை உள்ளடக்குதல் வேண்டும் ;"; அத்துடன்

(7) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :

(ண) அத்தகைய ஆள் ஏதேனும் உயர்தொழிலைக் கொண்டுநடாத்தும் ஆளொருவராக இருக்குமிடத்து, ஒத்திசைவுச் செலவுகள்.".

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது : *முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*(1)* அப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியில் –

(i) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், “97 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியினால் அனுமதிக்கப்பட்டவாறான கடனின் ஆகக்கூடிய அத்தகைய பணத்தொகையைவிடக் கூடுதலாகவுள்ள” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, “97 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியினால் அனுமதிக்கப்பட்டவாறான கடனின் ஆகக்கூடிய” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்;

(ii) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில், “அறவீடு என்றவகையாக ;” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “அறவீடு என்றவகையாக ; அல்லது” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(iii) அப்பந்தியின் (iv) உட்பந்தியில், “பொருளாதார சேவைக் கட்டணம் ;” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பொருளாதார சேவைக் கட்டணம் ; அல்லது” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(iv) அப்பந்தியின் (v) ஆம் உட்பந்தியில், “ஏதேனும் சேர்பெறுமதி வரி ;” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஏதேனும் சேர்பெறுமதி வரி ; அல்லது” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(v) அப்பந்தியின் (vi) ஆம் உட்பந்தியில், “iv ஆம் விடயத்தின்கீழ்” என்னும் சொற்களுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக “4 ஆம் விடயத்தின்கீழ்” என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்தியின் (ஆ) என்னும் பந்தியில் "பெறப்பட்ட ஏதேனும் தொகை" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலமும் :—

"பெறப்பட்ட ஏதேனும் தொகை ; அத்துடன்

(v) "கடன்" என்பது ஏதேனும் தனிசுச் சாதனத்தின் வழங்கீட்டிலிருந்தான நிதிகளின் சேகரிப்பை உள்ளடக்கும் ;";

(இ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் வரியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ல) ஏதேனும் கொளிக் கம்பெனியால் அத்தகைய கொளிக்கம்பெனியின் ஏதேனும் துணைநிலைக் கம்பெனிக்கு அத்தகைய துணைநிலைக் கம்பெனியால் பெறப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பில் அத்தகைய கொளிக்கம்பெனி ஓர் உற்பத்தியாளராக இருக்குமிடத்து, அந்த வரிமதிப்பீட்டாண்டின் இறுதியில் அத்தகைய கொளிக்கம்பெனியின் வழங்கப்பட்ட பங்குமூலதனத்தினதும் ஒதுக்கீடுகளினதும் கூட்டுமொத்தத்தின் மும்மடங்கிற்குச் சமமானவாறு அத்தகைய கடனின் அத்தகைய பாகத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலனவாறு அவ்வாறு செலுத்தப்படற்பாலதான வட்டியின் அத்தகைய பாகத்திற்கு மேலாக ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு செலுத்தப்படற்பாலதான வட்டியின் கூட்டுமொத்தத் தொகையின் மிகை, ஏதுமிருப்பின் :

ஆயின், அத்தகைய கொளிக்கம்பெனி ஓர் உற்பத்தியாளராக இல்லாதவிடத்து, முற்போந்த பந்தியின் ஏற்பாடுகள் "வழங்கப்பட்ட பங்குமூலதனத்தினதும் ஒதுக்கீடுகளினதும் கூட்டுமொத்தத்தின் மும்மடங்கிற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழங்கப்பட்ட பங்குமூலதனத்தினதும்

ஒதுக்கீடுகளினதும் கூட்டுமொத்தத்தின் நான்கு மடங்கிற்கு" என்னும் சொற்கள் பதிலிடப்பட்டிருந் தாற் போன்று ஏற்புடையனவாதல் வேண்டும்.

இப்பந்தியில் -

(i) "துணைநிலைக் கம்பெனி" மற்றும் "கொளிக்கம்பெனி" என்னும் சொல்லமைப்புக்கள் முறையே அவற்றிற்கு 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ii) ஏதேனும் கொளிக்கம்பெனி ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய கொளிக் கம்பெனியின் மொத்த விற்பனை வரவின் ஐம்பது சதவீதத்திற்கு மேலானது அத்தகைய கொளிக்கம்பெனியால் உற்பத்திசெய் யப்பட்ட உற்பத்திப்பொருட்களின் விற்பனையிலிருந்ததாயின் "ஓர் உற்பத்தியாளர்" எனக் கருதப்படுதல் வேண்டும் ;

(iii) "ஒதுக்கீடுகள்" என்பது ஏதேனும் சொத்தின் மீள்மதிப்பீட்டிலிருந்து ஏதேனும் மிகைக்காகக் கணக்கீடு செய்யும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஒதுக்கீடுகளை உள்ளடக்க மாட்டாது ; அத்துடன்

(iv) "மொத்த விற்பனை வரவு" என்பது ஏதேனும் கொளிக்கம்பெனியின் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் அத்தகைய கொளிக்கம்பெனியால் உற்பத்தி செய்யப்பட்டு அவ்வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட விற்பனை ஒவ்வொன்றிலுமிருந்து, உள்ளவாறாகப் பெறப்பட்டதாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, பெறப்படற்பாலதான மொத்தத் தொகை என்று பொருள்படும் :—

(அ) அதிலிருந்து –

(i) ஏதேனும் மூலதனச் சொத்தின் கையுதிர்ப்பிலிருந்து தேறிய வருவாய்களாக இருக்கின்ற அத்தகைய மொத்தத் தொகையில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் பணத் தொகையை ;

(ii) அந்த அல்லது ஏதேனும் முந்திய வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய கொளிக்கம்பெனியின் மொத்த விற்பனை வரவில் உள்ளடக்கப்பட்ட தொகையாகவிருக்கின்ற, அந்த வரிமதிப்பீட்டாண்டின்போது உறப்பட்ட ஏதேனும் அறவிடமுடியாக் கடன் தொகையை ; அத்துடன்

(iii) சேர்பெறுமதி வரியைக் குறிக்கும் பணத்தொகையொன்றாகிய அத்தகைய மொத்தத் தொகையில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகையை,

கழித்ததன் பின்னர் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் முந்திய ஆண்டில் பதிவழிக்கப்பட்ட அல்லது பதிவழிக்க அனுமதிக்கப்பட்ட ஏதேனும் அறவிடமுடியாக் கடனின் கணக்கில் அவ்வரிமதிப்பீட்டாண்டில் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையை அதனுடன் சேர்த்ததன் பின்னர் ; அத்துடன்

(V) "கடன்" என்பது ஏதேனும் தனிசுச் சாதனத்தின் வழங்கீட்டிலிருந்தான நிதிகளின் சேகரிப்பை உள்ளடக்கும்"; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் :—

"(4) எவரேனும் ஆளினால் கொண்டுநடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வர்த்தகம், வியாபாரம் உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலிலிருந்தான அத்தகைய ஆளின் ஏதேனும் வரிமதிப்பீட்டிற்கான நியதிச் சட்ட வருமானத்தைக் கணிப்பிடுகையில் அத்தகைய செலவினத்திற்கு அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கு ஏற்றிக்கூறப்படற்பாலனவான கடன் அல்லது அதன் அத்தகைய பாகம் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கான வரிமதிப்பீடொன்று செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாது எஞ்சியுள்ளதென வரிமதிப்பீட்டாளருக்குத் தோன்றுமாயின், ஏதேனும் செலவினம் அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பில் 25 ஆம் பிரிவின்கீழ் அல்லது இப்பிரிவின் கீழ் அல்லது 27 ஆம் பிரிவின்கீழ் கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது :

ஆயின், அத்தகைய கடன் அல்லது அதன் அத்தகைய பாகம் அவ்வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் செலுத்தப்பட்டுள்ளதென அவ்வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் வரிமதிப்பீட்டாளரின் திருப்திக்கு எண்பிக்கப்படின், வரிமதிப்பீட்டாளர் 171 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தொகையின் கழிப்பனவை அனுமதித்து வரிமதிப்பீட்டை மீளாய்வு செய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கழிப்பனவு அவ்வாறு மறுக்கப்பட்டதையடுத்து செலுத்தப்பட்டுள்ளதாகக் காணப்படும் ஏதேனும் வரியானது இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் முரணாக உள்ளது எது எவ்வாறிருப்பினும், மீளளிப்புச் செய்யப்படுதல் வேண்டும்.".

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) விடயத்துக்கேற்ப, 134 ஆம் பிரிவின் கீழ் அல்லது 135 ஆம் பிரிவின்கீழ் வருமானவரி கழிக்கப்பட்டுள்ள வட்டியாகவிருக்கும், எவரேனும் தனியாளுக்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற வட்டியிலிருந்தான நியதிச்சட்ட வருமானம்.";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(ஈ) ஏதேனும் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிலிருந்து பெறப்பட்ட நிதிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட, ஏதேனும் ரூபா மதிப்பீடுடைய திறைசேரி முறியிலிருந்து அத்தகைய ஆளுக்குத் திரளுகின்ற வட்டி."; அத்துடன்

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "வற்றை உள்ளடக்குதலாகாது:—" என்னும் சொற்கள் தொடக்கம் அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் :—

"வற்றை உள்ளடக்குதலாகாது :—

(அ) எந்த வட்டியிலிருந்து 133 ஆம் பிரிவின்கீழ் அல்லது 134 ஆம் பிரிவின்கீழ் வரி கழிக்கப்பட்டுள்ளதோ, அந்த ஏதேனும் வட்டி ; அல்லது

(ஆ) எந்தப் பங்கிலாபத்திலிருந்து 65 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வரி கழிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் பங்கிலாபம். ";

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் “பணத்தொகைகள் இப்பந்தியின் நோக்கங்களுக்காக, 26 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (X) என்னும்” என்ற சொற்களுக்கும் இலக்கங்களிற்கும் பதிலாக “பணத்தொகைகள் இப்பந்தியின் நோக்கங்களுக்காக, வட்டியானது 26 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ர) என்னும்” அல்லது (ல) என்னும் பந்தியினால் குறிப்பீடு செய்யப்பட்ட மிகையை உள்ளடக்காது ;” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்.

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் –

(i) “அந்த ஆளினால் உறப்பட்ட நட்டமொன்றின்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பந்தி (இ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட நட்டமொன்றாக அல்லாத அந்த ஆளினால் உறப்பட்ட நட்டமொன்றின்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ii) “அத்தகைய ஏதேனும் நட்டம் உட்பட (2)ஆம் உட்பிரிவின்” என்ற சொற்கள் தொடக்கம் “பின்னரும்” முன் கொணரப்படலாம்;” என்ற சொற்கள் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுக :–

“அத்தகைய ஏதேனும் நட்டம் மற்றும் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின் (ii) ஆம் பந்தியின் கீழ் நட்டமொன்றாகக் கருதப்பட்ட ஏதேனும் மிகையானது உட்பட, நட்டமொன்றின் தொகை –

(i) உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வட்டியிலும் பங்கிலாபங்களிலுமிருந்தான நியதிச் சட்ட வருமானத்தின் ;

(ii) உட்பிரிவு (2) இல் குறிப்பீடு

செய்யப்பட்ட ஏதேனும் வட்டி வருமானத்தின் ; அத்துடன்

(iii) உட்பிரிவு (3) இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் சன்மானத்தின், குற்றப்பணப் பங்கின், ஏதேனும் லொத்தர் பரிசின் அத்துடன் செலுத்தப் படற்பாலதான நட்டஈட்டின் மீதான ஏதேனும் வட்டியின்,

கூட்டு மொத்தத் தொகையின்மீது அவ்வாண்டுக்கான மொத்த நியதிச் சட்ட வருமானத்தின் மிகைத் தொகையின் ஆகக்கூடியது முப்பத்தைந்து சதவீதமான உச்ச வரம்புவரை அத்துடன் கழிக்கப்படமுடியாத ஏதேனும் நட்டம் அடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டின் போதும், அதன் பின்னரும் முன்கொண்டு செல்லப்படலாம். ” ;

(iii) உட்பந்திக்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில் “எந்த நட்டமும் முன்கொணரப்படுதலாகாது;” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “எந்த நட்டமும் முன்கொணரப்படலாகாது;” என்னும் சொற்களை இடுவதன்மூலம்;

(iv) அப்பந்திக்கான காப்புவாசகத்தின் (ஈ) என்னும் பந்தியில் —

(அ) “நட்டம் உறப்பட்டதான கம்பெனியின் அத்தகைய வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் நியதிச் சட்ட வருமானத்கெதிராதலன்றி” என்னும் சொற்களுக்குப் பதிலாக “கம்பெனியின் அத்தகைய வர்த்தகம் அல்லது நியதிச்சட்ட வருமானத்திற்கெதி

ராகவன்றி” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) “வருமானத்துக்கெதிராதலன்றி கழிக்கப்படுதலாகாது.” என்னும்சொற்கள் தொடக்கம் அந்தக் காப்பு வாசகத்தின் இறுதிவரையுள்ள எல்லா சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும் :-

“வருமானத்துக்கெதிராகவன்றி, கழிக்கப்படுதலாகாது.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக எந்த வரிமதிப்பீட்டாண்டிற்குக் கழிப்பனவுக்கான உரிமைக்கோரிக்கை செய்யப்படுகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டில் ஏதேனும் நேரத்தில் நேரடியாகவாயினுஞ்சரி நியமத்தர் ஊடாகவாயினுஞ்சரி, நட்டம் உறப்பட்ட வரிமதிப்பீட்டாண்டில் ஏதேனும் நேரத்தில் அத்தகைய பங்கு மூலதனத்தை வைத்திராத ஆட்களினால் கம்பெனியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் மூன்றிலொன்றுக்குமேல் வைத்திருக்கப்படுமிடத்து கம்பெனியின் சொத்துவத்தில் மாற்றமொன்று இடம் பெற்றுள்ளதாகக் கருதப்படும்.”.

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(இ) ஏதேனும் ஆயுள் காப்புறுதித் தொழிலில் அத்தகைய தொழிலிலிருந்தான எவையேனும் இலாபங்கள் அத்தகைய நியதிச்சட்ட வருமானத்தில் உள்ளடக்கப்படும் அளவுக்கு 2007, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் உறப்பட்ட ஏதேனும் நட்டம் ; அத்தகைய கழிப்பனவின் பின்னர் அத்தகைய நட்டத்தின் மீதி எதுவுமிருப்பின், அத்தகைய மீதியானது அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப்பின்னுறும் வரிமதிப்பீட்டாண்டிற்கான நட்டமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கத்திற்காக ஏதேனும் ஆயுள் காப்புறுதித் தொழிலின் இலாபங்கள் அல்லது நட்டம் 92 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிப்பிடப்படுதல் வேண்டும்.";
அத்துடன்

(5) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் (ஆ) என்னும் பந்தியில் "(2)ஆம் உட்பிரிவின் (ஆ) ஆம் பந்தியின் என்னும் பந்திகளில்" என்னும் சொற்களுக்குப்பதிலாக "(5)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்—

(அ) "நன்கொடையொன்றுக்கு," என்னும் சொல்லுக் குப்பதிலாக "நன்கொடையொன்றுக்கு," என் னும் சொற்களுக்குப் பதிலாக, "நன்கொடை யொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பந்திக்கான காப்புவாசகத்தை விட்டுவிடு வதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பரிவின் (4)ஆம் உட்பந்தியின் (அ) என்னும் பந்தியில் அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் "செய்யப்பட்ட கழிப்பனவு பத்து மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது;" என்னும் சொற்களுக்குப் பதிலாக—

"செய்யப்பட்ட கழிப்பனவு—

(அ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 2006, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிட்டாண் டாக இருக்குமிடத்து, பத்து மில்லியன் ரூபாவை யும்; அத்துடன்

(ஆ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 2007, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்கு மிடத்து, இருபத்தைந்து மில்லியன் ரூபாவை யும்,

விஞ்சுதலாகாது;" என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(3) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "கழிப்பனவு பத்து மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது;" என்னும் சொற்க ளுக்குப்பதிலாக,

"(அ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 2006, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட் டாண்டாக இருக்குமித்து பத்து மில்லியன் ரூபா வையும்; அத்துடன்

(ஆ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 2007, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து இருபத்தைந்து மில்லியன் ரூபாவையும்,

விஞ்சுதலாகாது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 37ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37ஆம் பிரிவு அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "பதினைந்து சதவீதத்திற்கு" என்னும் சொற்கள் அப்பந்தியில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றிற்குப்பதிலாக, "பத்துச் சதவீதத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகினறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 42ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 42ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:–

(1) அப்பிரிவை அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவில் "சரக்கனுப்புபவருக்கு அல்லது சரக்குப் பெறுநருக்கு எழும் இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2006, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, சரக்கனுப்புபவருக்கு அல்லது சரக்குப் பெறுநருக்கு எழும் இலாபங்களும் வருமானமும்" என்னும் செரற்களை இடுவதன் மூலமும், அத்துடன்

(3) மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :–

"(2) ஒரு ஒப்படைச் சரக்கின் அடிப்படையில் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டவையும் அத்தகைய

பண்டத்தை ஏதேனும் உற்பத்தி முறைவழிப்படுத்துகைக்கு உட்படுத்தாமல் மீள் ஏற்றுமதி செய்யப்படுபவையுமான எவையேனும் பண்டங்களின் ஏற்றுமதியிலிருந்து எவரேனும் சரக்கனுப்புபவருக்கு அல்லது சரக்குப் பெறுநருக்கு 2007, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இலங்கையில் எழும் இலாபங்களும்வருமானமும் இச்சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் வருமானவரிக்கு ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவு, "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஏதேனும் பங்கிற்கான அல்லது போனஸ் பங்கொன்றிற்கான உரிமையொன்று உட்பட ஏதேனும் பங்கின் அல்லது ஆணையின் விற்பனையிலிருந்து எழும் இலாபங்கள் அத்தகைய கையுதிர்ப்பு கொள்ளலின் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் இடம் பெற்றிருக்குமிடத்து அத்தகைய ஆளினால் பெறப்படுமிடத்து அல்லது அவருக்குத் திரளுமிடத்து" என்னும் சொற்களுக்குப்பதிலாக "2007, மார்ச் 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கூறு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியமொன்று அல்லது எவரேனும் ஆளுக்கு ஏதேனும் பங்கின் அல்லது ஏதேனும் பங்கிற்கான உரிமையின் அல்லது ஒரு பங்கு ஆணையின் விற்பனையிலிருந்து எழுகின்ற அத்தகைய கையுதிர்ப்பானது அத்தகைய பங்கின் அல்லது பங்கிற்கான உரிமையின் அல்லது பங்கு ஆணையின் கொள்ளல் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குமுன் இடம்பெற்றிருக்குமிடத்து;" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 45ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் " அத்தகைய குறித்துரைக்கப்பட்ட இலாபங்கள் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளில் முரணாக உள்ளது. எப்படியிருப்பினும் இச்சட்டத்துக்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் வரிவிதிக்

கற்பாலனவாதல் வேண்டும்.” என்னும் சொற்களுக்குப்பதிலாக, “அத்தகைய குறித்துரைக்கப்பட்ட இலாபங்கள் இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கமைய இச்சட்டத்திற்கான ஐந்தாம் அட்ட வணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதப்படி வரி அறவிப் படற்பாலதாதல் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**18.** முதன்தைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

(ஆ) (i) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான இலாபங்களிலிருந்து அந்த வரி மதிப்பீட் டாண்டில் அத்தகைய கம்பெனியால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தப் பங்கி லாபங்களின் கூட்டுமொத்தத் தொகையின் இயைபான பாகத்தின் பத்துச் சதவீதத் திற்கு; அத்துடன்

(ii) அத்தகைய கம்பெனியானது முற்போந்த ஆண்டில் அந்த ஆண்டிற்கான பகிர்ந் தளிக்கப்படக்கூடிய இலாபங்களின் இருபத் தைந்து சதவீதத்திற்குக் குறைவான தொகை யிலான பங்கிலாபங்களை பகிர்ந்தளித் துள்ளவிடத்து அந்த வரிமதிப்பீட்டாண் டிற்கு உடன் முற்போந்த வரிமதிப்பீட் டாண்டிற்கு (இதனகத்துப் பின்னர் இப் பந்தியில் “முற்போந்த வரிமதிப்பீட்

டாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய முற்போந்த ஆண்டில் அத்தகைய கம்பெனியால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தப் பங்கிலாபங்களின் கூட்டுமொத்தத்தின் அத்தகைய கம்பெனியின் பகிர்ந்தளிக்கப்படற்பாலதான இலாபங்களின் முப்பத்து மூன்றோடும் மூன்றிலொரு சதவீதத்தின் மிகையின் பதினைந்து சதவீதத்திற்கு,

சமனானதாயிருத்தல் வேண்டும் :

ஆயினும், ஏதேனும் கம்பெனி எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தால் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்காக ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு, அதன் பகிர்ந்தளிக்கப்படற்பாலதான இலாபங்கள் முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அல்லது ஒதுக்கிவைப்பதிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளது என ஆணையாளர் தலைமையைதிபதி திருப்பதிப்படுமிடத்து பகிர்ந்தளிப்பதிலிருந்து அல்லது அவ்வாறு ஒதுக்கிவைப்பதிலிருந்து அவ்வாறு தடைசெய்யப்பட்ட முழுவதும் அல்லது அத்தகைய பாகம், அத்தகைய கம்பெனி அந்த வரிமதிப்பீட்டிற்கான அதன் பகிர்ந்தளிக்கப்படற்பாலதான இலாபங்களின் இருபத்தைந்து சதவீதத்தைப் பகிர்ந்தளிந்துள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக அந்த வரிமதிப்பீட்டாண்டிற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

இப்பந்தியில்—

"கம்பெனி" என்பது ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பை அல்லது பரஸ்பர நிதியத்தை உள்ளடக்கமாட்டாது ;

"பகிர்ந்தளிக்கப்படற்பாலதான இலாபங்கள்" என்பது ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் மற்றும் ஏதேனும் கம்பெனி தொடர்பிலும் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு

அக்கம்பெனி –

(அ) அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு பந்தி (அ) என்பதற்கிணங்க கணிப்பிடப்பட்ட அக் கம்பெனியால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியினதும் ;

(ஆ) அந்த வரிமதிப்பீட்டாண்டில் ஏதேனும் காணியின் அல்லது ஏதேனும் மூலதனச் சொத்தின் கொள்ளலில் அக்கம்பெனி யால் உறப்பட்ட செலவினதும் ; அத்துடன்

(இ) ஏதேனும் மூலதனச் சொத்தின் மீள்மதிப் பீடொன்றின் அடிப்படையில் கணிப்பிடப் பட்டு புத்தக இலாபத்தில் சேர்க்கப்பட்டது மான ஏதேனும் எண்ணிய இலாபத் தினதும்,

கூட்டுமொத்தத்தால் குறைக்கப்பட்டு, அத்துடன் அத்தகைய புத்தக இலாபங்களை கணிப்பிடுகை யில் அத்தகைய மூலதனச் சொத்துத் தொடர்பில் கழிக்கப்பட்ட பெறுமானத்தேய்வுக்கான விடு தொகையினதும், ஏதேனும் மூலதனச் சொத்தின் மீள் மதிப்பீடொன்றின் அடிப்படையில் கணிப் பிடப்பட்டு அத்தகைய புத்தக இலாபங்களில் சேர்க் கப்பட்ட ஏதேனும் எண்ணிய நட்டத்தினதும் கூட்டு மொத்தத்தால் அதிகரிக்கப்பட்ட அத்தகைய புத்தக இலாபங்கள் எனப் பொருள்படும் ;

“இயைபான பாகம்” என்பது, ஏதேனும் கம்பெனி யால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தப் பங்கிலாபத் தின் கூட்டு மொத்தத் தொகை தொடர்பில் அதிலிருந்து –

(அ) ஏழாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப் பட்ட ஏதேனும் கம்பெனிக்கு அல்லது வேறு ஆட்களின் குழுவுக்கு ;

(ஆ) ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கு அல்லது பரஸ்பர நிதியத்திற்கு ;

(இ) அத்தகைய பங்கிலாபம் தொடர்பில் 10 ஆம் பிரிவின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவரான எவரேனும் பங்குதாரருக்கு ; அல்லது

(ஈ) வேறோர் வதிவுள்ள கம்பெனியிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்திலிருந்து,

பகிர்ந்தளிக்கப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்தைக் கழித்ததின் பின்னர் உள்ள அத்தகைய கூட்டு மொத்தத்தின் மீதி என்று பொருள்படும்.

(ஆ) அவ்வுட்பந்தியின் (இ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின் (ii) ஆம் பந்தியில், "அந்தத் தொகைக்குச் சமனான ஒரு தொகையாதல் வேண்டும்." என்னும் சொற்கள் தொடக்கம் அப்பந்தியின் இறுதிவரைக்குமுள்ள சொற்களுக்குப் பதிலாக, "அந்தத் தொகைக்குச் சமனான ஒரு தொகை யாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.";

(இ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கம் செய்வதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கம்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் —

"(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஏதேனும் கம்பெனியால் பகிர்ந்தளிக்கப்பட்ட ஏதேனும் பங்கிலாபம் தொடர்பில் செய்யப்படுவதன் 65 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் கழிப்பனவு "மொத்தப் பங்கிலாபம்" என்பது முன்னரான பங்கிலாபத்தின் தொகை என்று பொருள்படும்.".

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "வருமான வரியிலிருந்து;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வருமான வரியிலிருந்து;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "அப்பங்கிலாபம் கொண்டிருக்குமிடத்தும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அப்பங்கிலாம் கொண்டிருக்குமிடத்தும் ; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஈ) அத்தகைய பங்கிலாபம் விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றினால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு பங்கிலாபமாக இருக்குமிடத்தும்,"; அத்துடன்

(4) அப்பிரிவிற்கான ஓரக் குறிப்பில் "வரிமதிப்பிடற்பாலதான வருமானப் பாகமாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மொத்த நியதிச் சட்ட வருமானத்தின் பாகமாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது —

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) "அக்கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எந்த இலாபங்கள்மீது பத்து சதவீதத்திற்கும் சமமானதாகக் கணிப்பிடப்படுகின்றதோ அந்த வருமானவரியை அந்த இலாபங்களிலிருந்து பணமாகவோ அல்லது பணம் செலுத்துவதற்கான கட்டளையொன்றாகவோ" என்னும்

சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய மொத்தப் பங்கிலாபத்தின் பத்துச் சதவீதத்திற்குச் சமமான வருமான வரியைப் பணமாகவோ அல்லது பணம் செலுத்துவதற்கான கட்டளையொன் றாகவோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக,

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தையும் "மொத்தப் பங்கிலாபத்தின் தொகை" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தையும் நீக்கஞ்செய்துவிட்டு அவற்றிற்குப் பதிலாக பின்வரும்காப்புவாசகத்தை இடுவதன் மூலமும் ;

"ஆயின், இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்கு ஏதேனும் வதிவுள்ள கம்பெனியால் செலுத் தப்படற்பாலதான ஏதேனும் பங்கிலாபம் தொடர்பில் மொத்தப் பங்கிலாபத்தின் தொகை யைத் தீர்மானிக்கையில், நேரடியாகவாயினுஞ் சரி அல்லது ஒரு இடைவரு கம்பெனி அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடைவரு கம்பெனிகள் ஊடாகவாயினுஞ்சரி வேறு ஏதேனும் வதிவுள்ள கம்பெனியால் செலுத்தப்பட்டவாறும் முதலில் குறிப்பிடப்பட்ட வதிவுள்ள கம்பெனியால் பெறப் பட்டவாறும் உள்ள பங்கிலாபம் எதுவுமிருப் பின், அப்பங்கிலாபத்தின் அத்தகைய பாகத் தைக் கணக்கிற்கெடுத்தலாகாது,"; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் –

(அ) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :–

"(i) பெறப்பட்டதான பங்கிலாபங்கள் ;"; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை விட்டுவிடு வதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில், "வரியைக் கழிக்க உரித்துடையது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரியைக் கழித்தல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அதற்கிணங்க ஏற்புடையனவாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதற்கிணங்க ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயின், அவ்வாறு வரிமதிப்பீடு செய்யப்பட்டு விதிக்கபட்டவரி 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வரித்தொகை ஏதுமிருப்பின், அத்தொகையால் குறைக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "114 ஆம் பிரிவின்" என்னும் சொற்களுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக, " 113 ஆம் பிரிவின்" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "114 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க" என்னும் சொற்களுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக, " 113 ஆம் பிரிவின்" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க" என்பதிலிருந்து " அத்தகைய பகுதி" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக,

"1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திற்கிணங்க —

(அ) 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு பங்குகளை

அல்லது தனிசுச் சாதனங்களைக் கையாளும் தொழிலிலிருந்து பெறப்பட்ட இலாபங்களையும் வருமானத்தையும் கொண்டுள்ளவாறான ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின் ; அத்துடன்

(ஆ) 2007 ஏப்பிறல் 1ஆம் தேதியில் அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு தனிசுச் சாதனங்களின் கையாளுகையிலிருந்து பெறப்பட்ட இலாபங்களையும் வருமானத்தையும் கொண்டுள்ளவாறான ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின்,

வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகம்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது –

(1) "ஒவ்வொன்றும் 76 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டவாறான பிரிபடற்பாலதான இலாபங்களினதும் வேறு இலாபங்களினதும் ஒவ்வோர் மதிப்பீட்டாண் டிற்கும் இச்சட்டத்தின் ஆறாம் அட்டவணையில் வழங்கப்பட்டவாறான வேறு வருமானத்தின் கூட்டு மொத்தத் தொகையில்" என்னும் சொற்களுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக, –

"ஒவ்வொன்றும்

(அ) 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண் டிற்கு, 76 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரிபடற்பாலதான இலாபங்களினதும் அத்துடன் வேறு வருமானத்தினதும் கூட்டுமொத்தத்தின் மீதும் ; அத்துடன்

(ஆ) 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, 76 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரிபடற்பாலதான இலாபங்களினதும் அத்துடன் வேறு வருமானத்தினதும் கூட்டுமொத்தத்தின் ஆறு இலட்சம் ரூபாவுக்குக்கூடிய மிகை எதுவுமிருப்பின், அத்தகைய மிகையின்மீதும்,

இச்சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான உரிய வீதத்தில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டத்தின்கீழ்ச் செலுத்தப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் ; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவுக்கான இரண்டாம் காப்பு வாசகத்தில் "செலுத்தப்படற்பாலதாக வருமானவரி 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "செலுத்தப்படற்பாலதான வருமானவரி 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"ஏதேனும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்பின் கருதப்பட்ட இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் வருமானவரி அறவிடப் படற்பாலதாதல்.

102. (1) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு ஏதேனும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் மானியம், நன்கொடை அல்லது உதவு தொகை என்ற விதத்தில் அல்லது வேறு ஏதேனும் விதத்தில் ஏதேனும் பணத்தைப் பெறுமிடத்து, அத்தகைய பணத்தின் கூட்டுமொத்தத்திலிருந்து இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்டவாறான அத்தகைய பணத்தின் ஏதேனும் பாகத்தைக் கழித்தபின்னர் அத்தகைய பணத்தின் கூட்டுமொத்தத்தின் மூன்று சதவீதத்திற்குச்

சமமானவொரு தொகை இச்சட்டத்தின் வேறு ஏற்பாட்டில் முரணாக உள்ளது எப்படியிருப்பினும் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு, ஏதேனும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்பின் அத்த கைய பணத்தின் கூட்டுமொத்தத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான இலாபங்களும் வருமானமுமாக (இதனகத்துப் பின்னர் இப்பிரிவில், "கருதப்பட்ட இலாபங்களும் வருமானமும்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய அரச சார்பற்ற ஒழுங்கமைப்பின் அத்தகைய கருதப்பட்ட இலாபங் களும் வருமானமும் இலங்கையில் எழுந்துள்ள தாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, "அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு" என்பது, கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது கூட்டி ணைக்கப்படாததாயினுஞ்சரி, தன்னிச்சையான வோர் அடிப்படையில் ஆளொருவரினால் அல்லது ஆட்கள் குழுவொன்றினால் அமைக் கப்பட்டதும், தன்மையில் அரசாங்கஞ்சாராததாக வுள்ளதும், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப் பட்ட முறையில் பெறப்பட்ட பணத்தின்மீது தங்கி யுள்ளதும், வறியோருக்கும் இலம்பாடுற்றோருக் கும், நோய்வாய்ப்பட்டோருக்கும், அனாதைகளுக் கும், விதவைகளுக்கும், இளைஞர்களுக்கும், சிறுவர்களுக்கும் மனிதாபிமான தன்மைத்தான நிவாரணமும் சேவைகளும் அளிப்பதற்கும் அல்லது பொதுவாக ஏழைகளுக்கு நிவாரணம் அளிப்பதற்கும் தாபிக்கப்பட்டதும் அல்லது அமைத்துருவாக்கப்பட்டதுமான, (ஏதேனும் ஒழுங்கமைப்பு அல்லது கழகம் இப்பிரிவின் நோக்கங்களுக்காக அரச சார்பற்ற ஒழுங்கமைப் பல்லவென ஆணையாளர் தலைமையதிபதி யினால் தீர்மானிக்கப்பட்டாலொழிய, அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது கழகம் என்று பொருளாகும். ஆனால், எந்த அங்கீகரிக்கப்பட்ட தரும அமைப்புத் தொடர்பில் 35 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தணிப்பு அல்லது குறைப்பு அளிக்கப்பட்டுள்ளதோ, அந்த ஏதேனும்

34 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தரும அமைப்பை உள்ளடக்காது.

(3) அரச சார்பற்ற ஒழுங்கமைப்பொன்றின் கருதப்பட்ட இலாபங்களும், வருமானமும் 7 ஆம் பிரிவின் (உ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக் கமைவாக, இச்சட்டத்துக்கான ஐந்தாம் அட்ட வணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத் தில் வருமானவரி விதிக்கப்படற்பாலனவாதல் வேண்டும் :

ஆயின், ஏதேனும் அரச சார்பற்ற ஒழுங் கமைப்பு, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் —

(அ) அரசாங்கத்தினால் அடையாளங் காணப்பட்ட ஏதேனும் இடப்பரப்பில் புலம்பெயர்ந்த ஆட்களுக்குப் புனர்வாழ் வளித்தலும், உள்ளகக்கட்டமைப்பு வசதி களையும் சீவனோபாய ஆதாரத்தையும் வழங்குதலும் என்ற நோக்கங்களுக்காக அத்தகைய புனர்வாழ்வளித்தலிலும் வழங்குகையிலும் ; அல்லது

(ஆ) ஏதேனும் இடர்பாட்டின் தன்மையையும் பாரதூரமான தன்மையையும், அதன் விளைவாக வழங்கப்படுவதற்குத் தேவைப் படுத்தப்பட்ட நிவாரணத்தின் உச்ச அளவையும் கவனத்துட்கொண்டு, மனிதாபிமான தன்மைத்தானதாகவுள்ள தென அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் செயற்பாட்டில்,

ஈடுபட்டுள்ளதென ஆணையாளர் தலைமையதி பதி திருப்திப்படுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளி லும் செலுத்தப்படற்பாலதான வரியைக் குறைத்தல் நீதியானதாகவும்

ஒப்புரவானதாகவும் உள்ளதென அவருக்குத் தோன்றினால், அத்தகைய அரச சார்பற்ற ஒழுங்கமைப்பினால் அவ்வரிமதிப்பீட்டாண்டுக் காகச் செலுத்தப்படற்பாலதான வரியைக் குறைக்கலாம் அல்லது தணிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது –

(1) அப்பிரிவின் 1ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (இ) என்னும் பந்தியில், "133 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "விடயத்திற்கேற்ப, 133 ஆம் பிரிவின் 134 ஆம் பிரிவின் அல்லது 135 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் :–

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "நவெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "வரும் செத்தெம்பர் 30 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது –

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "தவறு கின்றவிடத்து ; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தவறுகின்றவிடத்து;" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "தவறு கின்றவிடத்து." என்னும் சொல்லுக்குப் பதிலாக, "தவறுகின்றவிடத்து; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :–

"(உ) ஒரு பங்குடைமையின் எவரேனும் முந்திய பங்காளர், 76 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட அறிவித்தலொன்றில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள், அவ்வுட்பிரிவின்கீழ் அத்தகைய முந்திய பங்காளர் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுவதற்குத் தவறுகின்றவிடத்து,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

"(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும் (2) ஆம் உட்பிரிவிலும் அடங்கியுள்ளது எது எப்படியிருப்பினும், —

(அ) (i) இலங்கையில் வதிவுள்ள ஏதேனும் கம்பெனியால் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின்கீழ் ; அல்லது

(ii) இலங்கையில் வதிவற்ற ஏதேனும் கம்பெனியால் 62 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ், அத்தகைய கம்பெனியால் செய்யப்பட்ட பணஅனுப்புகைகள் தொடர்பில்,

செலுத்தப்படற்பாலதான வரியின் முழுத்தொகையும், விடயத்திற்கேற்ப, அத்தகைய பணஅனுப்புகைகளைச் செய்த தேதியை அடுத்துவரும் முப்பதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) இலங்கையில் வதிவுள்ள ஏதேனும் கம்பெனியால் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின்கீழ், அத்தகைய வரி எந்த வரிமதிப்பீட்டாண்டுக்குச் செலுத்தப்படற்பாலதாகவுள்ளதோ, அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டின் மே மாதம் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

***30.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

*வங்கிகளும் நிதி நிறுவனங்களும் வருமான வரியைக் கழித்தல்.*

***133.*** (1) ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனம், அதில் வைப்பிலிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை மீதான வட்டியைச் செலுத்துமிடத்து, அத்தகைய வங்கி அல்லது நிதிநிறுவனம், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, செலுத்தப்படற்பாலதான வட்டியிலிருந்து இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வருமானவரியைக் கழித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கழிப்பனவு, (4) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்திலும் அத்தகைய வட்டி செலுத்தப்படும் நேரத்திலும் செய்யப்படுதலும் வேண்டும்.

(2) (இவ்வுட்பிரிவில் "முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பணத்தொகை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஏதேனும் பணத்தொகையானது, ஏதேனும் வங்கி அல்லது நிதிநிறுவனமானது, எழுத்திலான ஏதேனும் வாக்குறுதியில் பெயரினால் அடையாளங் காணப்படாத அத்தகைய வாக்குறுதியைச் செய்பவருக்கு, அத்தகைய வாக்குறுதி மீழலுக்காக முன்வைக்கப்படும் நேரத்தில் அல்லது அத்தகைய வாக்குறுதியில் கூறப்படுகின்றவாறான அத்தகைய தேதிக்குப் பின்னர் (இவ்வுட்பிரிவில் "கூறப்பட்ட பணத்தொகை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பணத்தொகைக்கு விஞ்சுதலாகவுள்ள பணத்தொகையொன்றைச் செலுத்துமென்ற அத்தகைய வங்கியின் அல்லது நிதி நிறுவனத்தின் அத்தகைய வாக்குறுதியின் பிரதி பயனாக அத்தகைய வங்கிக்கு அல்லது நிதி நிறுவனத்துக்குச் செலுத்தப்படுமிடத்து, அப்போது, அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம், முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பணத் தொகைக்கு மேலாக, கூறப்பட்ட பணத்தொகையின் விஞ்சு தொகையின்மீது வருமானவரியைக் கழித்தல் வேண்டும். கழிப்பனவானது, அத்தகைய விஞ்சு

தொகையின் பத்துசதவீதப்படியும், மற்றும் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பணத்தொகை அத்தகைய வங்கிக்கு அல்லது நிதிநிறுவனத்துக்குச் செலுத்தப்படும் நேரத்திலும் செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் வட்டியிலிருந்து அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்ட கழிப்பனவு :

(அ) (i) ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கம் ;

(ii) இலங்கை அரசாங்கத்தின் திரட்டு நிதியம் ; அல்லது

(iii) ஏதேனும் மாகாணசபையின் ஏதேனும் மாகாண நிதியம்,

அதன் பெறுநராகவுள்ள ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதாகவுள்ள ; அல்லது

(இ) 37 ஆம் பிரிவின்கீழ் அல்லது 96 ஆம் பிரிவின்கீழ் அதிலிருந்து வருமானவரி கழிக்கப்படற்பாலதாகவுள்ள,

ஏதேனும் வட்டிக்கு ஏற்புடையதாதலாகாது.

(4) இப்பிரிவின்கீழ் எந்த வட்டியிலிருந்து வருமானவரி கழிக்கப்படற்பாலதோ அந்த ஏதேனும் வட்டியின் பெறுநர் -

(அ) ஏதேனும் தரும நிறுவனமல்லாத ஏதேனும் பங்குடைமையாக, கம்பெனியாக அல்லது ஆட்கள் குழுவாக இருக்குமிடத்து, கழிப்பனவானது, அத்தகைய வட்டியின் பத்து சதவீதம் என்ற வீதத்தில் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) எந்த வங்கியில் அல்லது நிதிநிறுவனத்தில் வைப்பானது செய்யப்படுகின்றதோ அந்த வங்கியின் அல்லது நிதிநிறுவனத்தின் கிளைக்கு, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக, அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கான அதன் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் -

(i) 300,000 ரூபாவை விஞ்சுவதில்லையென எழுத்திலான வெளிப்படுத்துகையொன்றை அளிக்கின்ற ஏதேனும் தரும நிறுவனமாக இருக்குமிடத்து, அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காக அத்தகைய தரும நிறுவனத்துக்குச் செலுத்தப்படற்பாலதான அத்தகைய வட்டியிலிருந்து கழிப்பனவெதுவும் செய்யப்படுதலாகாது ;

(ii) 300,000 ரூபாவை விஞ்சுகின்றதென எழுத்திலான வெளிப்படுத்துகையொன்றை அளிக்கின்ற ஏதேனும் தரும நிறுவனமாக இருக்குமிடத்து, அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காக அத்தகைய தரும நிறுவனத்துக்குச் செலுத்தப்படற்பாலதான வட்டியின் பத்துசத வீதம் என்ற வீதத்தில் அத்தகைய வட்டியிலிருந்து கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) எவரேனும் தனியாளாக இருக்குமிடத்து, அப்போது, எந்த வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் வைப்பானது செய்யப்படுகின்றதோ அந்த வங்கியின் அல்லது நிதிநிறுவனத்தின் கிளைக்கு, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கான அவரது வரிமதிப்பிடற்பாலதான வருமானம் -

(i) 300,000 ரூபாவை விஞ்சுவதில்லையென எழுத்திலான வெளிப்படுத்துகையொன்றை அத்தகைய தனியாள் அளிக்குமிடத்து, அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்காகச் செலுத்தப்படற்பாலதான அத்தகைய வட்டியிலிருந்து கழிப்பனவெதுவும் செய்யப்படுதலாகாது ;

(ii) 300,000 ரூபாவை விஞ்சுகின்றதும் ஆனால் 600,000 ரூபாவை விஞ்சவில்லையெனவும் எழுத்திலான வெளிப்படுத்துகையொன்றை அத்தகைய தனியாள் அளிக்குமிடத்து, அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காகச் செலுத்தப்படற்பாலதான அத்தகைய வட்டியிலிருந்து, அத்தகைய வட்டியின் இரண்டரைச் சதவீதம் என்ற வீதத்தில் கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும். ; அத்துடன்

(iii) 600,000 ரூபாவை விஞ்சுகின்றதென எழுத்திலான வெளிப்படுத்துகையொன்றை அத்தகைய தனியாள் அளிக்குமிடத்து, வைப்பிலிடப்பட்ட ஒவ்வொரு பணத்தொகையின்மீதும் அவ்வரி மதிப்பீட்டாண்டுக்காகச் செலுத்தப்படற்பாலதான அத்தகைய வட்டியின் பத்து சதவீதம் என்ற வீதத்தில் அத்தகைய வட்டியிலிருந்து கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும் ;

(ஈ) விடயத்திற்கேற்ப, (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வெளிப்படுத்துகையை அளிக்காதுள்ள ஏதேனும் தரும நிறுவனமாக இருக்குமிடத்து, அல்லது

(இ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய் யப்பட்ட வெளிப்படுத்துகையை அளிக் காதுள்ள, அப்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தனியாளொருவராக இருக்கு மிடத்து, அத்தகைய வட்டியின் பத்து சதவீதம் என்ற வீதத்தில் கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும் ;

ஆயின், அத்தகைய தரும நிறுவனம் அல்லது அத்தகைய தனியாள், செலுத் தப்பட்ட வட்டி ஐயாயிரம் ரூபாவுக்குக் குறைவாகவுள்ள -

(அ) ஒரு சேமிப்புக் கணக்கைப் பேணுமிடத்து, ஏதேனும் மாதத் துக்காகச் செலுத்தப்பட்ட வட்டி யிலிருந்து கழிப்பனவெதுவும் செய்யப்படுதலாகாது ; அல்லது

(ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட சேமிப்புக் கணக்குகளைப் பேணுமிடத்து, அத்தகைய கணக்குகளில் ஒரு கணக்குத் தொடர்பில் மட்டும் ஏதேனும் மாதத்துக்காகச் செலுத் தப்பட்ட வட்டியிலிருந்து கழிப் பனவெதுவும் செய்யப்படுதலா காது.

இக்காப்பு வாசகத்தின் நோக்கத்துக் காக, சேமிப்புக் கணக்கு என்பது, அதிலிருந்து பணத்தை மீளப்பெறுவதற் கான உரிமையைப் பாதிக்கின்ற எவை யேனும் நிபந்தனைகளுக்கு அமைந்த தாயினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி, அத்துடன் வைப்பானது எக்காலப் பகுதிக்காகப் பேணப்படுகின்றதோ அக்காலப்பகுதியின்மீது தங்கியிராத வீதத்திலான வட்டியைக் கொண் டுள்ளவொரு கணக்கு என்று பொருளாகும்.

(5) எவரேனுமாளுக்கு அல்லது ஏதேனும் பங்குடைமைக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வட்டி அத்தகைய ஆளுக்காகவும் அவர் சார்பிலும் அல்லது பங்குடைமைக்காகவும் அதன் சார்பிலும் ஏதேனும் வங்கியினால் அல்லது நிதிநிறுவனத்தினால் பேணப்பட்ட ஏதேனும் கணக்குக்கு வரவுவைக்கப்படுமிடத்து, அத்தகைய வட்டியானது அவ்வாறு வரவு வைக்கப்படும் நேரத்தில், அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடைமைக்குச் செலுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) கூட்டாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனியாட்களினால் ஏதேனும் வங்கியில் அல்லது நிதிநிறுவனத்தில் வைப்பிலிடப்பட்ட ஏதேனும் பணத்தொகைமீது ஏதேனும் வங்கியினால் அல்லது நிதி நிறுவனத்தினால் செலுத்தப்படற்பாலதான வட்டி, அத்தகைய பணத்தொகையை அல்லது அதன் மீதான வட்டியை அத்தகைய தனியாட்களுக்கிடையே பிரித்தொதுக்குதல் தொடர்பாக அத்தகைய வங்கிக்கு அல்லது நிதிநிறுவனத்துக்குக் கொடுக்கப்பட்ட ஆணைக்கிணங்க அத்தகைய தனியாட்களுக்கிடையே பிரித்தொதுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும் தனியாளுக்குப் பிரித்தொதுக்கப்படுகின்றவாறான வட்டியின் அத்தகைய பாகம், அத்தகைய தனியாளுக்குப் பிரித்தொதுக்கப்படுகின்றவாறான அத்தகைய பணத்தொகையின் அத்தகைய பாகத்தின்மீது அவருக்குச் செலுத்தப்படற்பாலதான வட்டியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) விடயத்திற்கேற்ப, எவரேனுமாளுக்கு அல்லது பங்குடைமைக்கு ஒவ்வொரு வங்கியினாலும் அல்லது நிதிநிறுவனத்தினாலும் செலுத்தப்பட்ட ஏதேனும் வட்டியிலிருந்து (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வருமானவரியைக் கழிக்கின்ற ஒவ்வொரு வங்கி அல்லது நிதிநிறுவனமும், பின்வரும் விபரங்களை எடுத்துக்கூறுகின்ற கூற்றொன்றை அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு வழங்குதல் வேண்டும் :-

(அ) செலுத்தப்பட்ட வட்டியின் மொத்த மொத்தத்தொகை ;

(ஆ) வரியின் வீதமும் கழிக்கப்பட்ட வரியின் தொகையும் ;

(இ) உண்மையாகச் செலுத்தப்பட்ட வட்டியின் தேறிய தொகை ; அத்துடன்

(ஈ) அத்தகைய வட்டி எக்காலப்பகுதி தொடர்பானதோ அக்காலப்பகுதி.

(8) (அ) எவரேனும் தனியாளுக்கு அல்லது ஏதேனும் தரும நிறுவனத்துக்குச் செலுத்தப்படற்பாலதான வட்டியிலிருந்து, இப்பிரிவிற்கிணங்க ஏதேனும் வங்கியினால் அல்லது நிதிநிறுவனத்தினால் வருமானவரி கழிக்கப்படற்பாலதாகவுள்ளவிடத்து, அத்தகைய தனியாள் அல்லது தரும நிறுவனம், இப்பிரிவின்கீழ் எந்த வட்டியிலிருந்து வரி கழிக்கப்படற்பாலதாகவுள்ளதோ அந்த வட்டி, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக, விடயத்துக்கேற்ப, அத்தகைய தனியாளின் அல்லது அத்தகைய தரும நிறுவனத்தின் வரிமதிப்பிடப்படற்பாலதான வருமானத்தில் சேர்க்கப்பட்டிருந்திருந்தால், அந்த வரிமதிப்பீட்டாண்டுக்காக அவரினால் அல்லது அதனால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் தொகை இப்பிரிவின்கீழ் அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காகக் கழிக்கப்படற்பாலதான வருமான

வரியைப் பார்க்கிலும் குறைவாக விருப்பின், அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கான வருமான வரிக் கழிப்பனவில் அவசியமான சரிக்கட்டுதல்களைச் செய்வதற்கு அவ்வங்கிக்கு அல்லது நிதிநிறுவனத்துக்குப் பணிப்பொன்றை வழங்கும்படி வேண்டுகின்ற ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலானதும் அத்தகைய விபரங்களைக் கொண்டதுமான, விண்ணப்பமொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யலாம் ;

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர், (அ) என்னும் பந்தியின்கீழ் எவரேனும் தனியாளினால் அல்லது ஏதேனும் தரும நிறுவனத்தினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல், அத்தகைய விண்ணப்பத்திற் குறித்துரைக்கப்பட்ட வங்கிக்கு அல்லது நிதிநிறுவனத்துக்கு, அவசியமான பணிப்பை, எழுத்தில், (இதன் பிரதியொன்று விண்ணப்பகாரருக்கு வழங்கப்படுதல் வேண்டும்) வழங்கலாமென்பதுடன், அத்தகைய வங்கி அல்லது நிதிநிறுவனம், அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும் ;

ஆயின், வழங்கப்பட்ட அத்தகைய ஏதேனும் பணிப்பு எந்நேரத்திம் வேறுபடுத்தப்படலாம்.

(இ) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் (ஆ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட பணிப்பொன்றுடன் திருப்திப்படாத எவரேனும் தனியாள் அல்லது தருமநிறுவனம், அத்தகைய பணிப்பு வழங்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள், அத்தகைய மேன்முறையீட்டுக்கான ஏதுக்களைத் தெளிவாக எடுத்துக்கூறி, ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் மேன்முறையீட்டைச் செய்யலாம். இப்பந்தியின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் மீதான ஆணையாளர் தலைமையதிபதியின் முடிபு இறுதியானதும் முடிவுறானதுமாதல் வேண்டும் :

ஆயின், ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய தனியாளினால் அல்லது தரும நிறுவனத்தினால் எழுத்தில் செய்யப்பட்ட வேண்டுகோளின்மீது, அத்தகைய வரிமதிப்பீட்டுக்கெதிராக 165 ஆம் பிரிவின்கீழான மேன்முறையீடொன்றை அத்தகைய தனியாள் அல்லது தரும நிறுவனம் செய்வதனை இயலச்செய்யும் நோக்கத்துக்காக, அந்த வரிமதிப்பீட்டாண்

டுக்காக அத்தகைய தனியாளின் மீது அல்லது தரும நிறுவனத்தின் மீது 163 ஆம் பிரிவின் கீழான வரி மதிப்பீடொன்றைச் செய்வித்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு வங்கியும் நிதிநிறுவனமும் -

(i) ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில், எவரேனுமாளுக்கு அல்லது பங்குடைமைக்கு ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அதனாற் செலுத்தப்பட்ட வட்டியும் அத்தகைய வட்டி எத்தேதியில் அல்லது தேதிகளில் செலுத்தப்பட்டதோ அத்தேதியும் அல்லது தேதிகளும் பற்றித் தகுந்த பதிவேடொன்றை வைத்திருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) உட்பந்தி (i) இன்கீழ் அதனால் பேணப்பட்ட ஏதேனும் பதிவேட்டைச் சோதனையிடுவதற்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரை அனுமதித்தல் வேண்டும்.”.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(i) அப்பிரிவை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலம் ; அத்துடன்

(ii) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :-

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மிகையானது விடயத்திற்கேற்ப, அத்தகைய பிணையத்திலிருந்து, திறைசேரி முறியிலிருந்து, திறைசேரி உண்டியலிலிருந்து அல்லது மத்திய வங்கிப் பிணையத்திலிருந்து திரண்ட வட்டியாகக் கருதப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கம் செய்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "133 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக, "134 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :-

*"(2) ஆளெவரும் ஏதேனும் கம்பெனியால் அல்லது கம்பெனி சார்பில் வழங்கப்பட்ட எந்தக் கூட்டிணைக்கப்பட்ட கடன் பிணையத்தின்மீது ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் போது வட்டி செலுத்தப்பட்ட அல்லது வரவுவைக் கப்பட்ட அல்லது அத்தகைய பிணையத்தின்மீது கழிப்பனவு அனுமதிக்கப்பட்ட நேரத்தில் 135 ஆம் பிரிவின்கீழ் பத்து சதவீதப்படி வருமானவரி கழிக்கப் பட்டுள்ளதோ, அந்த ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட கடன் பிணையம் சம்பந்தப்பட்ட ஏதேனும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல் வாங்கலில் அல்லது ஏதேனும் இரண்டாம்நிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கலில் ஈடுபட்டுள்ளவிடத்து, அத்தகைய கொடுக்கல்வாங்க லிலிருந்து தேறும் வட்டி வருமானம், அத்தகைய ஆள் கம்பெனியொன்றாக இருக்கும் அத்தகைய ஆளின் அந்த வரிமதிப்பீட் டாண்டிற்கான நியதிச் சட்டவருமானத்தின் அல்லது அத்தகைய ஆள் கம்பெனியொன்றல்லாத வேறு ஆளொருவராக இருக்கும் அத்தகைய ஆளின் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கான வரிமதிப்பிடற்பால தான வருமானத்தின் ஒரு பாகமாக அமையுமாயின், அத்தகைய ஆள் அத்தகைய வட்டி வருமானத்தின் பத்து சதவீதப்படியான கூட்டுமொத்தத் தொகையின் ஒன்பதில் ஒரு பாகமான புனையப்பட்ட வரி வரவு ஒன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 138 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***34.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 138 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்தின் 133 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் வட்டி வருமானத்தை அதனது மொத்த நியதிச்சட்ட வருமானத்தில் உட்படுத்தியுள்ள கம்பெனியொன்றாகவிருக்கும் ஆள் எவரும்," என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "இச்சட்டத்தின் 134 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வட்டி வருமானத்தை அவரது அல்லது அதனது மொத்த நியதிச்சட்ட வருமானத்தில் உட்படுத்தியுள்ள தனியாளொருவர் அல்லாத எவரேனுமாள்" என்னும் சொற்களையும் எண்ணையும், "அத்துடன் அத்தகைய*

கம்பெனியானது அத்தகைய விஞ்சுகையின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் மீளளிப்பொன்றுக்கு உரித்துடையதாலாகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய ஆள் அத்தகைய விஞ்சுதொகையின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் மீளளிப்பொன்றுக்கு உரித்துடையவராதலாகாது" என்னும் சொற்களையும் முறையே இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**35.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "133 ஆம் பிரிவின் அல்லது 136 ஆம் பிரிவின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "133 ஆம் பிரிவின் அல்லது 135 ஆம் பிரிவின்" என்னும் சொற்களையும் எண்களையும், அத்துடன் "133 ஆம் பிரிவின் அல்லது 136 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "133 ஆம் பிரிவின் அல்லது 135 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் முறையே இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "133 ஆம் பிரிவின் அல்லது 136 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "133 ஆம் பிரிவின் அல்லது 135 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில், "133 ஆம் பிரிவின்கீழ் அல்லது 136 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "133 ஆம் அல்லது 135 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 153 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**36.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 153 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "கழித்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் :—

"கழித்தல் வேண்டும் :

ஆயின், 2007, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கான குறித்துரைக்கப்பட்ட கட்டணம், ஏதேனும் நிர்மாணக் கட்டுமானவேலை தொடர்பிலான கட்டணங்களைக் கொண்டிருக்குமிடத்து அத்தகைய கட்டணங்களிலிருந்து எந்த வீதத்தில் வருமானவரி கழிக்கப்படற்பாலதோ அந்த வீதமானது ஒரு சதவீதமாதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "குறித்துரைக்கப்பட்ட கட்டணம்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில், "ஏதேனும் தரகையும், தரகுக்கூலியையும் அல்லது இவற்றையொத்த இயல்பினதான "ஏதேனும் பணத்தொகையையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் தரகையும், தரகுக்கூலியையும், கேள்விப்பத்திரம்மூலம் அல்லது கூறுவிலைமூலம் ஒப்பந்த அடிப்படையின்மீது ஏதேனும் பொருளை வழங்குவதற்காகச் செய்யப்பட்ட கொடுப்பனவொன்றையும் அல்லது இவற்றையொத்த இயல்பினதான வேறு பணத்தொகையையும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் :".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 166 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 166 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இருபதுக்கு அதிகமாகாத உறுப்பினர்களைக் கொண்டுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முப்பதுக்கு அதிகமாகாத உறுப்பினர்களைக் கொண்டுள்ள" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 173 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**38.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 173 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "இப்பந்தியின் நோக்கங்களுக்காக "வருமானவரி என்பது" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் உட்பந்தியின் முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் :-

"இப்பந்தியின் நோக்கங்களுக்காக "வருமானவரி" என்பது -

(அ) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக ஒரு கம்பெனி தொடர்பாக, அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காக, 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ், அக்கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான வரியை உள்ளடக்குதலாகாது ;

(ஆ) எவரேனுமாள் தொடர்பாக, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக, இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டனவும், (இதனகத்துப் பின்னர் "முற்போந்த ஆண்டு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முற்போந்த ஆண்டில் அவை தொடர்பிலான அத்தகைய விலக்களிப்பு இல்லாதொழிந்தனவுமான ஒரு வதிவிடத்தின் தேறிய வருடாந்தப் பெறுமதியும் இச்சட்டத்தின்கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் மானியமும் தவிர்ந்தனவுமான எவையேனும் இலாபங்களும் வருமானமும், அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காக அவ்வாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தைக் கணிப்பிடுவதில் கருத்திற்கொள்ளப்பட்டிருந்திருந்தால், அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கு முற்போந்த ஆண்டுக்காக அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதாக இருந்திருக்கும் வருமானவரி என்று பொருளாகும் ;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

(iii) இப்பிரிவின்கீழ்ச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தண்டத்தைக் குறைத்தல் அல்லது விட்டுவிடுதல் எல்லாச் சூழ்நிலைகளிலும் நீதியானதும் ஒப்புரவானதுமென ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தோன்றினால், ஆணையாளர் தலைமையதிபதி, இப்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தண்டத்தைக் குறைக்கலாம் அல்லது விட்டுவிடலாம் ;

(iv) *ஆணையாளர் தலைமையதிபதி, 2005, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கானதும், 2005, ஒற்றோபர் 1 ஆந் தேதியன்றுள்ளவாறு செலுத்தப்படாதுள்ளதுமான வரிமீது திரண்ட தண்டத்தை, அத்தகைய வரியின் முழுமையும், 2007, திசெம்பர் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அதற்கென அவருடன் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட ஒரு செயற்றிட்டத்திற்கிணங்க, அத்தகைய உடன்படிக்கைத் தேதியை அடுத்துவருகின்ற மூன்றாண்டுகளுக்கு மேற்படாதவொரு காலப்பகுதியினுள் செலுத்தப்படின், விட்டுவிடுதல் வேண்டும். அவ்வாறு உடன்பட்டுக்கொள்ளப்பட்ட அத்தகைய ஏதேனும் செயற்றிட்டம் கடைப்பிடிக்கப்படாதவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி முற்போந்த பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய தண்டத்தைக் குறைத்தலாகாது அல்லது விட்டுவிடுதலாகாது..*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 175 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**39.** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 175 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது* :-

(1) *அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "தவணைதவறியதாக வருகின்றதுமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தவணைதவறியதாக வந்ததுமான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்* ;

(2) *அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்* :-

"(ஆஆ) *2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் இறுக்கப்படுவதும் விதிக்கப்படுவதும், 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தவணைதவறியதும் அல்லது தவணைதவறியதாக வருகின்றதுமான ஏதேனும் வருமானவரியையும்* ;";

(3) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "அல்லது இச்சட்டத்தின் 113 ஆம் பிரிவில்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "அல்லது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவில் அல்லது இச்சட்டத்தின் 113 ஆம் பிரிவில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "இச்சட்டத்தின் கீழ் அல்லது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ், ஒரு கம்பெனியால் செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ், ஒரு கம்பெனியால் செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 200 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**40**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 200 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில், "8 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "7 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "134 என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "133 ஆம் பிரிவின் அல்லது 134 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "133 என்னும் பிரிவுகளின்கீழான" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "133 ஆம் பிரிவின் அல்லது 135 ஆம் பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 207 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 207 ஆம் பிரிவு, "அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது ஆணையாளர் ஒருவருக்கு அல்லது பிரதி ஆணையாளர் ஒருவருக்கு அல்லது ஒரு வரிமதிப்பீட்டாளருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது சிரேஷ்ட பிரதி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது பிரதி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது ஓர் சிரேஷ்ட ஆணையாளருக்கு அல்லது ஆணையாளருக்கு அல்லது ஒரு பிரதி ஆணையாளருக்கு அல்லது ஒரு சிரேட்ட வரிமதிப்பீட்டாளருக்கு அல்லது ஒரு வரிமதிப்பீட்டாளருக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 208 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 208 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "உண்ணாட்டரசிறை தலைமையதிபதியின் அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "அல்லது சிரேஷ்ட உண்ணாட்டரசிறை வரிமதிப்பீட்டாளர் ஒருவராகப்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது சிரேஷ்ட உண்ணாட்டரசிறை வரிமதிப்பீட்டாளர் ஒருவராக அல்லது உண்ணாட்டரசிறை வரிமதிப்பீட்டாளர் ஒருவராக அல்லது உண்ணாட்டரசிறை வரி அலுவலர் ஒருவராகப்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "வாணிப வங்கி" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

"'ஆணையாளர்"' என்பது, இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் ஒருவர் என்று பொருளாகும் ;";

(2) "ஆணையாளர் தலைமையதிபதி" என்பதன் வரைவிலக்கணத்தின் (அ) என்னும் பந்தியில், "சிரேஷ்ட பிரதி ஆணையாளர் தலைமையதிபதியையும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சிரேட்ட பிரதி ஆணையாளர் தலைமையதிபதியையும், ஒரு பிரதி ஆணையாளர் தலைமையதிபதியையும், ஒரு சிரேட்ட ஆணையாளரையும், ஓர் ஆணையாளரையும் மற்றும் பிரதி ஆணையாளரையும் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) "பிரதி ஆணையாளர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

"'பிரதி ஆணையாளர் தலைமையதிபதி"' என்பது, இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட ஒரு சிரேட்ட பிரதி உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும் ;";

(4) "பரஸ்பர நிதியம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன்மூலமும் ; அத்துடன்

(5) "பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை பேரவை" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும் :-

" 'சிரேட்ட பிரதி ஆணையாளர் தலைமையதிபதி" ' என்பது, இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட சிரேட்ட பிரதி உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும் ;

'சிரேட்ட ஆணையாளர்' என்பது, இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட ஒரு சிரேட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்; " ;

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 218 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 218 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் அவ்வேற்பாட்டில் குறித்துரைக்கப்படும் ஒரு காலப்பகுதிக்கு விலக்களிக்கப்பட்டிருக்குமிடத்தும், 2000 மாச்சு 31 ஆந் திகதியன்று எவரேனும் ஒருவர் தொடர்பில்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "விடயத்திற்கேற்ப, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அல்லது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ், அவ்வேற்பாடுகளுள் எவற்றிலும் குறித்துரைக்கப்பட்டவாறானவொரு காலப்பகுதிக்கு விலக்களிக்கப்பட்டிருக்குமிடத்தும் மற்றும் 2006, மாச்சு 31 ஆந் தேதியன்று எவரேனும் ஆள் தொடர்பில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "2000, ஏப்பிறல் 1 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "2000, ஏப்பிறல் 1 ஆம் திகதிக்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :-

"(5) தனியாளொருவர் -

(அ) (i) ஏதேனும் கடனின் முதலைத் திருப்பிக் கொடுப்பதிலான ; அல்லது

(ii) அப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் நியதிகளின்படி மாதாந்தக் கொடுப்பனவுகளாக,

2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், இலங்கை அரசாங்கத்துக்கு அல்லது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க,

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உஉ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்துக்கு ஏதேனும் தொகையைச் செலுத்துமிடத்து ; அல்லது

(ஆ) 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர், 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (i) ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டதும் மற்றும் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்குப் பிரித்தொதுக்கப் பட்டதுமான ஏதேனும் செலவினத்தை உற்றுள்ளவிடத்து,

விடயத்துக்கேற்ப, அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை அல்லது அவ்வாறு பிரித்தொதுக்கப்பட்ட செலவினம், (1) ஆம் உட்பிரிவில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், ஆனால் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அந்தந் தப் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனை களுக்கமைவாக, விடயத்துக்கேற்ப, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் அல்லது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் வலுவில் தொடர்ந்திருக்கின்றது என்றாற்போன்று, 2006, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு அத்தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து கழிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.";

(4) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :-

"(6) (அ) 2000, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்ட ஏதேனும் மூலதனச் சொத்து அல்லது 2000, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட ஏதேனும் தகைமைபெற்ற கட்டிடம் ; அல்லது

(ஆ) 2000, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்ட ஏதேனும் மூலதனச் சொத்து, அல்லது 2000, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2006, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட ஏதேனும் தகைமைபெற்ற கட்டிடம்,

என்பன தொடர்பிலான பெறுமானத் தேய்வுக்கான விடுதொகை, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏற்புடையதாகாமை எவ்வாறிருப்பினும், விடயத்துக் கேற்ப, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அல்லது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அந்தந்த ஏற்பாடுகளுக்கிணங்கக் கணிப்பிடுதல் வேண்டும்."; அத்துடன்

(5) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில், "2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் அல்லது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத் துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**45.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வட்டவணையின் IV ஆம் பாகத்துக்காகப் பின்வரும் பாகத்தை இடுவதன்மூலமும் :-

**பாகம்** IV

35 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தொழிலிலிருந்தான குறித்த சில இலாபங்களுக்கு ஏற்புடையற்பாலனவான வருமானவரி வீதங்கள்.

(அ) 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்காக -

35 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விஞ்சிய பணத்தொகை தொடர்பாக விடயத்துக்கேற்ப, உதவுதொகைக் காலப்பகுதி அல்லது சேவைக் காலப்பகுதி, (அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்திற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை அல்லாத), 20 ஆண்டுகளுக்குக் குறை வாகவிருக்குமிடத்து.

| | |
|---|---|
| பெறப்பட்ட பணத்தொகையின் முதலாவது 1,000,000 ரூபாவின் மீது | இல்லை |

35 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விஞ்சிய பணத்தொகை தொடர்பாக விடயத்துக்கேற்ப, உதவுதொகைக் காலப்பகுதி அல்லது சேவைக் காலப்பகுதி, (அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்திற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பணத் தொகை அல்லாத), 20 ஆண்டுகளுக்குக் குறைவாக இல்லாதிருக்குமிடத்து.

| | |
|---|---|
| பெறப்பட்ட பணத்தொகையின் முதலாவது 2,000,000 ரூபாவின் மீது | இல்லை |

| | |
|---|---|
| அடுத்த 500,000 ரூபாவின்மீது | 5 சதவீதம் |
| அடுத்த 500,000 ரூபாவின்மீது | 10 சதவீதம் |
| மீதியின்மீது | 15 சதவீதம் |

(ஆ) 2007, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக -

35 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விஞ்சிய பணத்தொகை தொடர்பாக விடயத்துக்கேற்ப, உதவுதொகைக் காலப்பகுதி அல்லது சேவைக் காலப்பகுதி, (அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்திற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை அல்லாத), 20 ஆண்டுகளுக்குக் குறை வாகவிருக்குமிடத்து.

| | |
|---|---|
| முதலாவது 2,000,000 ரூபாவின் மீது | இல்லை |
| அடுத்த 1,000,000 ரூபாவின்மீது | 5 சதவீதம் |
| மீதியின்மீது | 10 சதவீதம் |

35 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விஞ்சிய பணத்தொகை தொடர்பாக விடயத்துக்கேற்ப, உதவுதொகைக் காலப்பகுதி அல்லது சேவைக் காலப்பகுதி, (அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்திற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை அல்லாத), 20 ஆண்டுகளுக்குக் குறைவாக இல்லாதிருக்குமிடத்து.

| | |
|---|---|
| முதலாவது 5,000,000 ரூபாவின் மீது | இல்லை |
| அடுத்து 1,000,000 ரூபாவின் மீது | 5 சதவீதம் |
| மீதியின் மீது | 10 சதவீதம் |

(2) அவ்வட்டவணையின் IV ஆம் பாகத்தின் முடிவில் பின்வரும் புதிய பாகத்தைச் சேர்ப்பதன் மூலமும் :—

**பாகம் V**

| | |
|---|---|
| 35 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகைக்கு ஏற்புடையற் பாலதான வருமானவரி வீதமானது | பாகம் I இன்படி, ஆனால் ஆகக்கூடியது 20 சதவீதத்துக் கமையவாக |

**46.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாகத்திற் கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

**"இரண்டாம் அட்டவணை**

(பிரிவுகள் 61 மற்றும் 75)

**வருமானவரி வீதங்கள் — கம்பெனிகள்**

**பாகம் அ**

| | |
|---|---|
| 1. ஏதேனும் தொழில்முயற்சிக் கம்பெனி 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் ; | 20 சதவீதம் |
| 2. ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம் — | |

| | |
|---|---|
| (அ) 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற, வரிமதிப்பீட்டாண்டுக்காக — | |
| (i) 75 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகத்தின் மீது | 10 சதவீதம் |
| (ii) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீதிப்பாகத்தின்மீது | 20 சதவீதம் |
| (ஆ) 2007, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக | |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது | 10 சதவீதம் |

**பாகம் ஆ**

| | |
|---|---|
| 1. (அ) 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற, வரிமதிப்பீட்டாண்டுக்காக - | |
| பாகம் அ வில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனியொன்றல்லாததும், அதன் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 5,000,000 ரூபாவை விஞ்சாததுமான ஏதேனும் கம்பெனி ; | 15 சதவீதம் |

(ஆ) 2007, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக –

(அ) (i) அதன் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 5,000,000 ரூபாவை விஞ்சாததும்;

(ii) பாகம் அ வில் குறிப்பீடு செய்யப்படாதவொரு கம்பெனியாகவுள்ளதும்; அத்துடன்

(ஆ) கம்பெனிகளின் ஒரு தொகுதியின் வைத்திருக்கைக் கம்பெனியாக, துணை நிலைக் கம்பெனியாக, அல்லது இணைக் கம்பெனியாகவில்லாததும்,

ஆன ஏதேனும் கம்பெனி,

வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது 15 சதவீதம்

இவ்விடயத்தின் நோக்கத்துக்காக, "வைத்திருக்கைக் கம்பெனி", "துணைநிலைக் கம்பெனி", மற்றும் "கம்பெனிகளின் தொகுதி" என்னும் சொல்லமைப்புகள், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் அவை கொண்டுள்ள அதே முறையான கருத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. (இதனகத்துப்பின்னர் "முதலாவது வரிமதிப்பீட்டாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்), இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில் எந்த வரிமதிப்பீட்டாண்டுக்காக ஏதேனும் கம்பெனியின் பங்குகள் முதன் முதலாக விலை கூறப்படுகின்றனவோ அந்த வரிமதிப்பீட்டாண்டுக்காக வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 5,000,000 ரூபாவை விஞ்சுகின்றதோ அந்த முதலாவது வரிமதிப்பீட்டாண்டை உடனடியாக அடுத்துறும் நான்காண்டுக் காலப்பகுதியினுள்ளான ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் அந்த ஏதேனும் கம்பெனி –

| | |
|---|---|
| அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது | 33 1/2 சதவீதம் |

ஆயின், அத்தகைய முதலாவது வரிமதிப்பீட்டாண்டு 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து, 33 1/2 சதவீதம் என்ற வீதம் அத்தகைய நான்காண்டுக் காலப்பகுதியினுள் வருகின்றதும், ஆனால் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்றதுமான ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக ஏற்புடையதாதல் வேண்டும்.

3. இவ்வட்டணையில் இதனகத்து முன்னர் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பெனி அல்லாத ஏதேனும் கம்பெனி, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக –

| | |
|---|---|
| அவ்வரிமதிப்பீட்டாண்டுக்கான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது | 35 சதவீதம் |

4. ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக ஏதேனும் கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து, அப்போது அத்தகைய விஞ்சுதொகைக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதானவொரு அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்காக அத்தகைய கம்பெனியால் செலுத்தப்படற்பாலதாகவுள்ள, இச்சட்டத்திற்கிணங்கக் கணிப்பிடப்பட்ட வரியின் அத்தகைய பாகம், அத்தகைய விஞ்சுதொகைக்கு மேற்படுதலாகது.”.

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**47.** (1) இச்சட்டத்தின் பிரிவுகள் 2(1), 6(4), 10(5) அத்துடன் (6), 25(2) அத்துடன் (3), 26, 36(2), 44(3) அத்துடன் (4) அத்துடன் 45(2) என்பவற்றால் முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவுகள் 4(1), 13, 25(1), 78(1), 102, 153, 218 என்பவற்றிற்கும் மற்றும் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணைக்கும் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங் களுக்காகவும் 2006, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 32(3) ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 2006, நவெம்பர் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டனவாகக் கருததப்படுதல் வேண்டும்.

இலங்கை முதலீட்டுச் சபையால் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை களிலுள்ள குறித்த சில விலக்களிப்பு களை செல்லுபடி யாக்குதல்.

**48.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர், ஆனால் 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், இலங்கை முதலீட்டுச் சபை தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ்த் தொழில்முயற்சியொன்றுடன் உடன்படிக்கையொன் றைச் செய்துகொண்டிருக்குமிடத்தும் அத்துடன் அத்தகைய உடன் படிக்கையானது அத்தகைய தொழில்முயற்சியின் இலாபங்கள் மற்றும் வருமானம் முழுவதற்கும் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்திற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ்ச் செலுத்தப்படற் பாலதான வருமானவரியிலிருந்து விலக்களிப்பிற்கு ஏற்பாடு செய்துள்ளவிடத்தும், அத்தகைய விலக்களிப்பு அத்தொழில் முயற்சிக்கு முதன்மைச் சட்டவாக்கத்தால் வெளிப்படையாக அளிக்கப்பட்டிருந்தாற்போன்று அத்தகைய விலக்களிப்பானது, அத்தகைய உடன்படிக்கைத் தேதியிலிருந்து செல்லுபடியாகவும் பயனுறுவதாகவும் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**49.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்